தாலுக்காக்களில் உள்ளவர்கள் இன்றைய தினம் கள்ள மார்க்கெட்டைத் தேடிப்போகிற நிலை ஏற்படாதா என்று அறிய விரும்புகிறேன். ஆகவே, அங்குள்ள கட்டுப்பாட்டை நீக்குவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கேள்வியைப் பொதுவான தாகப் போடுகிறார்கள். இது தவறான கருத்தாகும். நடமாட்ட கட்டுப்பாடு நிலைமை இல்லாமல் இருந்தாலேயே விலை குறைந்துவிடும் என்று சொல்லுவது சரியானதல்ல. உதாரணமாக இராமநாதபுரம் திருவாடானைப் பகுதியில் கட்டுப்பாட்டை எடுக்கச் சொன்னார்கள். அதன்காரணமாக இந்த பகுதியில் உள்ள தானியம் அங்கே கிடைக்காது ராஜபாளையம் போன்ற இடத்திற்குப் போக ஆரம்பித்து விட்டது. அதன் காரணமாக இப்போது கட்டுப்பாட்டைக் கொண்டுவரச் சொல்கிறார்கள்.

ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் காவேரி சமவெளிப் பிரதேசமாக இருக்கிற காரணத்தால் சாகுபடிக்கு அதிகச் செலவு ஆகாது. பிற மாவட்டங்களில் பாசனம் நீர் இறவையை அடிப்படையாகக் கொண்டு பம்பு செட்டுகள் வைத்து நடைபெறுவதால் செலவு அதிகமாகிறது. அதோடு விலைவாசி ஏற்றம் காரணமாக உணவுப் பொருள் உற்பத்திச் செலவு அதிகமாகவும் இருப்பதனால் தஞ்சை நிலக்கிழார்களை கேட்டுக்கொண்டு விலையை நிர்ணயிக்காமல், பிற மாவட்டங்களில் உள்ள வர்களையும் கலந்துகொண்டு நிர்ணயம் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக அங்கங்கு உள்ள செலவுக் கணக்கு அடிப்படையில் அந்த அந்த மாவட்டக் கலெக்டர்களே தான் விலையை நிர்ணயம் செய்கிறார்கள். தஞ்சை மாவட்ட நிலக் கிழார்களைக் கேட்டு நிர்ணயிப்பது என்பது இல்லை. இப்போதுள்ளது மாக்சிமம் விலை. அதுவும் கோயம்புத்தூர் விலை ஒன்று, திருச்சி விலை ஒன்று என்பதாக இப்படித்தான் இருக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டத் தலைநகர்

*133 வினா.—திரு. கரு. சீமைச்சாமி :
திரு. கே. விநாயகம் : } மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகரை அந்த மாவட்டத்திற்குள் மாற்ற உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் என்றால், எப்போது அமுலாக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. விநாயகம் : இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமைச் செயலகம் இத்தனை ஆண்டுகளாக மதுரையில் இருக்கிறது. இதை மாற்ற வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கேட்டு வருகிறார்கள். இனியாவது இந்தச் சர்க்கார் இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமைச் செயலகம் இராமநாதபுரத்திலேயே இருக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சார், இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமையகம் இராமநாதபுரத்திலேயே இருக்கவேண்டு மென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. திரு. தங்கப்பன், எம்.எல்.ஏ. கூட அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றி கலெக்டரிடம் விவரம் கேட்டு இருக்கிறோம். அவரது அறிக்கை வந்தவுடன் போர்டு இதுபற்றி பரிசீலனைசெய்து முடிவு எடுக்கும்.

திரு. கரு. சீமைச்சாமி : இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமையகம் இராமநாதபுரத்திலேயே இருக்கவேண்டுமென்று திரு. தங்கப்பன் மாத்திரம் அல்ல, நமது சட்ட மந்திரி அவர்களும் கூடச் சொல்லி இருக்கிறார்கள். திரும்பத் திரும்ப கட்டடம் இல்லை, வசதி இல்லை என்று சொல்லாது எந்த இடத்திற்காவது, இராமநாதபுரம் மாவட்டத்திற்குள் மாற்ற நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எல்லா மாவட்டங்களையும் பொறுத்தவரையில் பரிசீலனை செய்யப்படுகிறது. குறிப்பாகச் செங்கல்பட்டிலிருந்து சில பகுதிகளைப் பிரித்து, தனியாகக் காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஒரு மாவட்டம் அமைக்க இருக்கிறது. அது போலவே இராமநாதபுரம் மாவட்டத்தில் சிற்சில பகுதிகளைப் பிரித்து இராமநாதபுரம் மாவட்டம் என்று வைத்து மற்றவற்றை மற்ற மாவட்டங்களில் இணைக்க இருக்கிறது. இதுபற்றி விவரமான அறிக்கை வந்தவுடன் முடிவு எடுக்கப்படும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : இராமநாதபுரம் மாவட்டத்தின் ஜில்லாக் கோர்ட் தேவக் கோட்டையில் இருக்கிறது. அங்கே கட்டிட வசதிகள் இருக்கின்றன. பக்கத்தில் காரைக்குடியிலும் கட்டிட வசதிகள் இருக்கின்றன. ஆகவே தேவக் கோட்டையிலோ அல்லது காரைக்குடியிலோ இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமைச் செயலகத்தை வைக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது பற்றி பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். கனம் உறுப்பினர் தம் ஆலோசனையையும் அவர்களிடத்தில் சொல்லலாம். நமக்கு அறிக்கை கிடைத்தவுடன் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மாவட்டங்களின் தலைமையகம் அந்த அந்த மாவட்டத்திற்குள்ளேயே இருக்க வேண்டுமென்பது விவாதத்திற்கு இடமில்லாது ஒப்புக் கொள்ளப்பட வேண்டிய பிரச்சினை. இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமையகம் இராமநாதபுரத்தில்தான் இருக்க வேண்டும். இப்போது செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைமையகம் சென்னையிலே இருக்கிறது. இவைகளை மாற்ற வேண்டுமென்ற நியாயத்தை இந்தச் சர்க்கார் மறுக்கவில்லை. நிதி நிலைமை இல்லாத காரணமாகவே இப்படியே விடப்பட்டிருக்கிறது.

Loop

***134 *Q.*—THIRU. K. VINAYAKAM :** Will the Hon. the Minister for Public Health be pleased to state ;

(*a*) whether it is a fact that I.U.C.D. or loop has so far not been implemented by Madras Government ; and

(*b*) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இந்தப் பிரச்னைக்கு இடமில்லை.

திரு. கே. விநயகம் : இந்த intra uterine contraceptive device என்பதற்கு வளையம் என்று சொல்கிறார்களே, இதைப் பற்றி தேர்தல் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் மிகக் குறைவாகப் பேசி வந்ததன் காரணமாகத்தான் இதை தடுத்து நிறுத்துவதற்கு இப்போது முயற்சிக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். கேள்வியே வளையம் வளையமாகப் போய் வருகிறது (சிரிப்பு). கனம் உறுப்பினர் கேட்ட கேள்வியின் முற்பகுதி தவறான கருத்தாகும். திராவிட முன்னேற்றக் கழகம் குடும்பக் கட்டுப்பாட்டை எதிர்க்கவில்லை. அவர்கள் தலைமையேற்று நடத்தி வைக்கிற மங்களகரமான திருமண நேரத்திலே கூட குடும்பக் கட்டுப்பாட்டை வலியுறுத்தி வருகிறார்கள். உணவு நெருக்கடிக்கு ஜனத்தொகைப் பெருக்கந் தான் காரணம் என்று சொல்லப்பட்டு வந்ததை மறுக்கிற வகையில் பேசியிருக்கலாம். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தவர்கள் சிலபேர் ஆரம்பத்தில் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் தேவையில்லை, எவ்வளவு குழந்தைகளை வேண்டுமானாலும் பெறலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். நல்ல வேளையாக அவர்கள் இப்போது காங்கிரஸ்காரர்களிடத்தில் தான் இருக்கிறார்கள்.